தொகுதிகள் வாரியாக சிறப்பாகப் பணியாற்றும் வழக்கறிஞர்கள் பட்டியலை தலைமைக் கழகத்திற்கு அனுப்பிவைப்பீர்!

# இளம் வழக்கறிஞர்களை அதிகளவில் சேர்த்து அணியினை வலுப்படுத்துவோம்!

## வடக்கு மண்டல வழக்கறிஞர் அணிக் கூட்டத்தில் கழக சட்டத் துறைச் செயலாளர் என்.ஆர்.இளங்கோ பேச்சு!

சென்னை, ஆக. 20 - தொகுதி வாரியாக சிறப்பாக பணியாற்றும் வழக்கறிஞர்கள் பட்டியலை தலைமைக் கழகத்திற்கு அனுப்பி வைத்திட வேண்டும். மேலும் இளம் வழக்கறிஞர்களை அதிகளவில் வலுப்படுத்திட வேண்டும் என்று சென்னை - அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற வடக்கு மண்டல வழக்கறிஞர் அணிக் கூட்டத்தில் உரையாற்றிய கழக சட்டத் துறைச் செயலாளர் என்.ஆர்.இளங்கோ குறிப்பிட்டார்.

வடக்கு மண்டல வழக்கறிஞர் அணி ஆலோசனைக் கூட்டத்தில் கழக சட்டத் துறை செயலாளர் என்.ஆர். இளங்கோ பேசியதாவது:

எங்களுடைய அழைப்பை ஏற்று இங்கே வந்திருக்கக்கூடிய பெருமதிப்பிற்குரிய மாவட்டச் செயலாளர்களே, வழக்கறிஞர் அணி தோழர்களே, உங்கள் அனைவருக்கும் என்னுடைய வணக்கம்.

எதிர்க்கட்சித் தலைவர் மற்ற நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதால், இந்த நிகழ்ச்சி நிரலில் ஒரு சிறு மாற்றம். முதலில் மூத்த வழக்கறிஞர்கள் எல்லாம் பேசிய பிறகுதான் நான் பேசவேண்டியதாக இருந்தது. ஆனால் அவர் மற்ற நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதால் இந்த நிகழ்ச்சி நிரலில் சிறு மாற்றம் ஏற்பட்டிருக்கிறது.

**மிக மோசமான அரசு!**

தோழர்களே, நாம் இப்போது எதிர்க்கட்சியிலே இருக்கிறோம். கைது நடவடிக்கைகள் எப்படி நம்முடைய கழகத் தோழர்களைப் பாதிக்கிறது? பேசியதற்கெல்லாம் பொருந்தாத சட்டங்களில் கைது நடவடிக்கை இருந்தது. அதைப் பார்த்துக் கொண்டே இருக்கும் போது, எதிர்க்கட்சி தலைவரையே அநியாயமான குற்றச்சாட்டுகளாக... முதல் நாள் தஞ்சையில் பேசுகிறார்; மறுநாள் காலை 6:00 மணிக்கு வந்து அவருடைய வீட்டிலே இருந்து அவரைக் கைது செய்யக்கூடிய அளவிற்கு இந்தக் காவல்துறை மிக மோசமான ஒரு சர்வாதிகாரப் போக்கைக் கொண்டிருக்கிறது.

இதுபோன்ற ஒரு கால கட்டத்தில்தான் நாம் இங்கே கூடியிருக்கிறோம். இதற்கு முன்பாக நாம் எதிர்க்கட்சியில் இருந்த போதெல்லாம் கூட இவ்வளவு ஒரு சர்வாதிகாரப் போக்கை நாம் பார்த்ததில்லை. ஒரு எதிர்க்கட்சித் தலைவர் ஒரு பொதுக்கூட்டத்தில் பேசியதற்காக கைது செய்யக்கூடிய அளவிற்கு ஒரு அரசு துணியுமேயானால், அது இத்தனை நாட்கள் நடந்த எல்லா சர்வாதிகார அரசுகளை விட மிக மோசமான அரசாகத்தான் நாம் பார்க்க வேண்டி இருக்கிறது. இந்தக் கால கட்டத்தில் இந்த வழக்கறிஞர் அணி கூட்டங்கள் ஒவ்வொரு மண்டலமாக நடத்த வேண்டியதினுடைய அவசியம் நமக்கு ஏற்பட்டிருக்கிறது.

**நாம் பணியாற்ற வேண்டிய முறை!**

நாம் இங்கே கூடியிருப்பதனுடைய காரணம், இளைஞரணி செயலாளர் அவர்கள் வந்தவுடனே என்னிடம் கேட்டார், "கலந்துரையாடல்னு சொன்னீங்களே, நிறைய பேர் பேசுவாங்களா?" அப்படின்னாங்க. "இல்லைங்க, நாங்க மட்டும்தான் பேசுவோம்." "அது கலந்துரையாடல் இல்லையே" அப்படின்னாரு அவரு. அது அவருடைய விட் (wit) அது எப்பவுமே இருக்கும். ஆனால், கலந்துரையாடல்னா நாம இதுக்கப்புறம் என்னென்னலாம் பண்ண வேண்டி இருக்கு, என்னென்னவெல்லாம் பணியாற்ற வேண்டி இருக்கிறது என்பதற்காக இந்தக் கூட்டமாக இதை நீங்கள் எடுத்துக் கொள்ள வேண்டும்.

கழகத்தில் ஏறக்குறைய 23 அணிகள் இருந்தாலும் கூட, ஒவ்வொரு அணியும் தன்னுடைய வகையிலே மிகச் சிறப்பாக பணியாற்றினாலும் கூட, தேர்தல் காலங்களில் வழக்கறிஞர் அணி, குறிப்பாக கடந்த தேர்தலிலும் கூட வழக்கறிஞர் அணி ஆற்றிய பணியை தலைவர் அவர்கள் பாராட்டியிருக்கிறார்கள், இளந்தலைவர் அவர்கள் பாராட்டியிருக்கிறார்கள், கழகமே நம்மைப் பாராட்டியிருக்கிறது. அதை, அந்தப் பணியை யாராலும் மறுக்க முடியாது. அது உண்மையிலேயே பாராட்டுக்குரியது.

**எதேச்சதிகாரப் போக்கு!**

ஆனால், தேர்தல் முடிந்தவுடன் நம்முடைய பணிகள் முடிந்துவிட்டதா என்றால், அப்படி முடியவில்லை என்பதை நான் ஏற்கனவே சொன்னது போல, கைது நடவடிக்கைகள் அல்லது எதேச்சதிகாரப் போக்கில் நாம் களத்திலே நின்று ஒவ்வொரு தொண்டனுக்கும் பாதுகாப்பாக இருக்க வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறோம்.

நம்மீது, வழக்கறிஞர் அணி மீது நிறைய எதிர்பார்ப்புகள் இருக்கிறது. குறிப்பாக சொல்ல வேண்டுமென்றால், கைது நடவடிக்கைகளில் உடனே நினைத்தது நடக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். அது அவர்களுடைய உரிமை; அப்படித்தான் எதிர்பார்ப்பார்கள். நாம் அதற்கு ஏற்றார் போல் நடந்து கொள்ளவும் வேண்டும். முடிந்தவரை கைது செய்யாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். வழக்கு பதிந்தவுடன் முன் ஜாமீன் எடுக்க முடியுமான்னு பார்க்கணும். அப்படி இல்லாட்டி முதல் நாள் பேசியதற்கு மறுநாள் காலையிலே அரெஸ்ட் பண்ண வந்தாங்கன்னா, ரிமாண்ட் ரிஜக்ஷன் பண்றதுக்கு பார்க்கணும். அப்படி இல்லாட்டி உடனே மேஜிஸ்ட்ரேட் கோர்ட்லயாவது பெயில் எடுக்கப் பார்க்கணும்.

ஆனால் கழகத் தொண்டர்களுக்கு, அல்லது பாதிக்கப்பட்ட கழகத் தொண்டர்களுக்காவது நீங்கள் ஒரு விஷயத்தைச் சொல்லிக் கொடுக்க வேண்டும். நீதித்துறை என்பது ஒரு முறையைப் பின்பற்றித்தான் நடக்கிறது. நாம இன்ஸ்டண்ட்டா ஜஸ்டிஸ் வாங்கிக் கொடுக்க முடியுமானா, இன்ஸ்டண்ட்டா எல்லா கேஸ்லயும் ஜஸ்டிஸ் வாங்கித் தர முடியாது. சில வழக்குகளில் அது நடக்கும்; சில வழக்குகளில் அது நடக்காது. அதனால மாவட்டக் கழகத்துல மாவட்டச் செயலாளர்கள் கிட்ட இது போன்ற கைது



நடவடிக்கை வந்தால் உடனே அவங்ககிட்ட சொல்லி, "இந்த வழக்கு இப்படி இருக்கிறது; இது இப்படித்தான் ஆகும்; இரண்டு நாள் ஆகும், மூன்று நாள் ஆகும்"ங்கறதை வெளிப்படையாக வழக்கறிஞர்கள் மாவட்டச் செயலாளர்களிடமும், தொடர்புடைய மாவட்டச் செயலாளர்களிடம் எடுத்துச் சொல்ல வேண்டியது நம்முடைய கடமை. "நாங்க இதை பண்ணிடுறோம், அதை பண்ணிடுறோம்"னு சொல்லி அவங்களை வந்து தவறாக நம்பவைத்துவிடாதீர்கள்.

முதல்ல நாம செய்ய வேண்டிய வேலை, உடனே அவங்களுக்குத் தீர்வு கிடைப்பதற்கான ஏற்பாடு செய்யணும். வழக்கின் தன்மையைப் பொறுத்து, "இந்த வழக்கு இப்படியானதாக இருக்கிறது, இந்த வழக்கிலே இந்த மாதிரி நடக்கும், இவ்வளவு நாள் ஆகும்" அப்படிங்கறதை முதலிலேயே கழகத்துல மாவட்டச் செயலாளருக்கும், பாதிக்கப்பட்ட அந்தத் தொண்டர் வீட்டிலேயும் சொல்லி அதை அவங்களை நீங்க சரி செய்ய வேண்டும்.

**சமூக வலைதளங்களில் அவதூறுச் செய்திகள்!**

இரண்டாவது, சமூக வலைதளங்களில் வருகிற பிரச்சினைகள். இதைப் பொறுத்தவரைக்கும் நம்ம மீது வந்து நிறைய எதிர்பார்ப்பு இருக்கிறது; அதைச் செய்ய வேண்டிய கடமை நமக்கு இருக்கிறது. ஏனென்றால் பொதுக்கூட்டங்களில் பேசுவது போல் அல்ல, சமூக வலைதளங்களிலே பரப்பப்படக்கூடிய கருத்துக்கள் அல்லது பொய்ச் செய்திகள், வதந்திகள், அவதூறுச் செய்திகள்... இது எல்லாரையும் மனதை நோகடிக்கிறது. யாரை? பெரிய தலைவர் கலைஞர் முதற்கொண்டு ஒவ்வொருத்தரையும் எந்த ஆதாரமும் இல்லாமல் மிகவும் அருவருக்கத்தக்க வகையில் அவர்கள் வந்து சமூக வலைதளங்களில் பரப்புகிறார்கள்.

அப்போது நாம் என்ன செய்கிறோம்? நாம் வந்து ரெஸ்பான்ஸ் என்ன பண்ணனும் அப்படின்னா, நம்ம கம்ப்ளைன்ட் கொடுத்துட்டு அதோடு விட்டுவிடுகிறோமா? அப்படின்னா, இதுவரைக்கும் சமூக வலைதளங்களிலே ஆளும் கட்சி செய்திருக்கக் கூடிய அத்தனை நிகழ்வுகளையும் தனியாக ஒரு ரிட் பெட்டிஷன் போட்டு, அதுல அந்தச் செய்திகளை பரப்பியோர் மீதும் சேர்த்து ஒரு ரிட் பெட்டிஷன் போட்டு அத்தனை வழக்குகளையும், இதில் முக்கியமாக இரண்டு நபர்கள் அரசாங்கத்தில் மிக முக்கிய பொறுப்பில் இருக்கக் கூடியவர்களுடைய நிறுவனங்கள்தான் இந்தப் பொய்ச் செய்திகளை மிக அதிகமாகப் பரப்புவதற்கான காரணமாக இருக்கிறார்கள் என்பதற்காக அவங்களையும் ரெஸ்பான்டன்ட்டா சேர்த்து ரிட் பெட்டிஷன் போட்டிருக்கோம். அந்த ரிட் பெட்டிஷன்ல சொல்லப்பட்ட அத்தனை வழக்குகளையும் சிபிஐக்கு அனுப்பணும்னு கேட்டிருக்கோம். ஏன்னா அது ஒரு சைபர் டெரரிசம்; என்னுடைய பார்வையில் அது ஒரு சைபர் டெரரிசம்.

**சட்ட ரீதியாக தயாராக இருப்பீர்!**

ஆனால் நாம் அல்லது நமது இயக்கத்தைச் சார்ந்தவர்கள் அல்லது அரசுக்கு எதிரான கருத்துக்களைப் பரப்புவர்கள் மீது பொருந்தாத விதிகளின் கீழ், பொருந்தாத சட்டங்கள் கீழ் கைது நடவடிக்கை செய்கிறார்கள். அப்படியென்றால் ரெண்டு விஷயம் நாம் செய்ய வேண்டி இருக்கிறது. அது என்ன செய்யணும் அப்படின்னா, ஒவ்வொரு மாவட்டக் கழகத்திலும் இருக்கக்கூடிய வழக்கறிஞர் அணி, ஃபர்ஸ்ட் ரெஸ்பான்ஸ் டீம் (First Response Team)னு ஒன்னு ரெடி பண்ணனும். அதை தயவுசெய்து அமைப்பாளர்கள் அதை குறித்துக் கொள்ளுங்கள்—First Response Team.

அதாவது கைது நடவடிக்கை ஏற்பட்டால் உடனே அந்தத் தொண்டர் வீட்டுக்கு ஒரு மூணு, நாலு வழக்கறிஞர் போகணும். அந்த மேஜிஸ்ட்ரேட் கோர்ட்டுக்கு ஒரு மூணு, நாலு அட்வகேட் போய் வெயிட் பண்ணனும். ஒரு வேளை ரிமாண்டுக்கு கூட்டிட்டு வந்தா, ரிமாண்ட் ரிஜக்ஷனுக்கு நீங்க ஆர்க்யூ பண்ணனும். ரிமாண்ட் ரிஜக்ஷன் ஒத்துக்கலனா பெயில் உடனே விடுவதற்கான காரணங்களை எடுத்துச் சொல்லணும். அதற்கு வழக்கறிஞர்கள் சட்டரீதியாக தங்களைத் தகுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

உச்ச நீதிமன்றத்துல இப்ப அதற்கான நிறைய வழிகாட்டலோடு நிறைய தீர்ப்புகள் வந்துவிட்டன. உங்களுக்குத் தெரியும், உங்க சீனியர்ஸுக்குத் தெரியும். இருந்தாலும் கூட தென்மண்டலத்தில் நடந்த அந்தக் கூட்டத்திலே, வாட்ஸ்அப்பில் ஒரு தொகுப்பை எல்லா வழக்கறிஞருக்கும் கொடுத்தோம். அதைப் பயன்படுத்தி தென்மண்டலத்தில் போன வாரம் நடந்தது; அதற்கப்புறமாக தூத்துக்குடியில் நடந்த இரண்டு கைதுகளில் நம்ம வழக்கறிஞர்கள் அந்த தொகுப்பை கொண்டு போய் கொடுத்து வாதிட்டு, இரண்டு வழக்குகளிலும் ரிமாண்ட் ரிஜெக்ட் பண்ண வச்சாங்க.

**நமது அணிக்குப் பெருமை!**

எனவே சட்டரீதியாக உங்களை நீங்கள் தயார்படுத்திக் கொள்ள வேண்டும். கழக உணர்வு எவ்வளவுக்கு எவ்வளவு இருக்கிறதோ, அதற்கு இணையாக உங்களைச் சட்டத்தில் தகுதி படைத்தவர்களாக மாற்றிக்கொள்ள வேண்டும். "ஒரு வக்கீல் மட்டும்தான் ஆர்க்யூ பண்ணுவாரு"ன்னு இருக்கவே இருக்காதீங்க. ஒவ்வொரு வக்கீலும் தனித்தனியாக இந்த மாதிரி கேஸ் வந்ததுன்னா அதை எடுத்து நடத்தி வெற்றி பெறுவதற்கு தன்னை தகுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். அதுதான் கழக வழக்கறிஞருக்கு, நமது அணிக்கு அழகு; கழகத்திற்கு பெருமை.

அந்த வழக்குகளின் தொகுப்பு இப்ப தலைமைக் கழகத்தில் இருக்கக்கூடிய எல்லா நிர்வாகி கள் கிட்டயும் இருக்கு. உங்களுக்கு யார் யாருக்கு வேண்டுமோ அவங்ககிட்ட போன் பண்ணிக் கேட்டீங்கன்னா, இல்ல வாட்ஸ் அப்ல ஜட்ஜ்மென்ட் அனுப்புங்கன்னு சொன்னீங்கன்னா உடனே அனுப்பிச்சு வச்சிடுவாங்க. அந்தத் தொகுப்பை வச்சுக்கோங்க. இதுதான் சுப்ரீம் கோர்ட்ல இப்ப வரைக்கும் வந்திருக்கக்கூடிய எல்லாத் தீர்ப்புகளும், லேட்டஸ்ட்டா வந்திருக்கக்கூடிய தீர்ப்புகள்—ஏன் கைதுகள் செய்யப்படக்கூடாது, கைதுகள் செய்யப்படணும்னா எப்பப்பெல்லாம் ரிமாண்ட் ரிஜெக்ட் பண்ணலாம், எப்பெல்லாம் பெயில் விடலாம் என்ற தீர்ப்புகள். இந்த மூன்று தொகுப்பிலேயும் பார்த்தீங்கன்னா, இது போன்ற கைது நடவடிக்கைகளில் நிச்சயமாக என்றைக்கு ரிமாண்டுக்கு கொடுக்கிறாங்களோ அன்றைக்கே உங்களால் பெயில் பெற்றுத் தர முடியும். அதற்காக உங்களை நீங்கள் தகுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இது First Response Team.

**சட்டத்திற்குப் புறம்பானதை பதிவு செய்வீர்!**

இரண்டாவது, குவிக் ரெஸ்பான்ஸ் டீம் (Quick Response Team)னு ஒன்று ரெடி பண்ணுங்க. அது யாருன்னா இளம் வழக்கறிஞர்களை, ஒவ்வொரு மாவட்டத்திலும் இருக்கக் கூடிய இளம் வழக்கறிஞர்களை, பெண் வழக்கறிஞர்களை இணைத்து Quick Response Teamனு ஒன்று தயார் பண்ணுங்க. அவங்க யார்... என்ன. செய்ய வேண்டுமென்றால், சமூக வலைதளங்களிலே நம்முடைய கழகத்தைப் பற்றி பேசக்கூடிய இடங்களிலே அல்லது தவறான கருத்துக்களைப் பரப்பக்கூடிய இடங்களிலே, தயவுசெய்து இந்த Quick Response Team உண்மையான செய்திகள் என்ன, இது ஏன் பொய்ச் செய்தி, இது ஏன் மறுக்கப்படுகிறது, இதை எப்படிச் சட்டத்திற்குப் புறம்பானது என்ற பதிவுகளை Quick Response Team என்ற ஒரு டீம் பதிவு செய்ய வேண்டும். இது இரண்டத்தையும் கழகம் நம்மிடம் இருந்து எதிர்பார்க்கிறது. அதை நாம் தவறாமல் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இதுபோன்ற நிகழ்வுகளிலே நாம பொறுப்புடனும் நடந்து கொள்ள வேண்டும், புரொபஷனலாவும் நடந்துக்கணும். ஏன் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும் என்றால், ஒரு நாள் கைது பண்ணி ஒரு தொண்டரை உள்ள வச்சிட்டாங்கன்னா அவங்க குடும்பம் எவ்வளவு வேதனைப்படும்? இது போன்ற எதிர்க்கட்சியாக இருக்கும்போது தொண்டர்கள் வந்து எவ்வளவோ தியாகங்களை செஞ்சிட்டு அவர்கள் கழகத்திற்காக சிறைக்குச் செல்கிறார்கள். அந்த நேரங்களில் நாம எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்றால், அத்தனையும் பொறுப்பும் வழக்கறிஞர்கிட்டதான் இருக்குதுங்கறதை உணர்ந்து கொள்ள வேண்டும். ஒரு அநியாயமான கைது நடந்தால், அதற்குப் பொறுப்பேற்று அவரை வெளியே கொண்டு வர வரைக்கும் அது வழக்கறிஞருடைய அணியோட பொறுப்பு என்பதைத் தெரிந்து நடந்து கொள்ள வேண்டும்.

**நாம் செய்ய வேண்டிய முதல் வேலை!**

புரொபஷனலாவும் நடந்துக்கணும். அது நான் ஏற்கனவே சொன்ன மாதிரி, தயவு செய்து யார் கிட்டயும் ஃபால்ஸ் ப்ராமிஸ் (False Promise) கொடுத்துடாதீர்கள். "உடனே வந்துருவாரு, நாளைக்கு வந்துருவாரு"ன்னா ப்ராமிஸ் கொடுத்துடாதீங்க. வழக்கின் தன்மையைப் பொறுத்து, சில நேரங்களில் நீதிபதியைப் பொறுத்து நீங்க, "இத்தனை நாள் கழிச்சுதான் அவர் பெயில் விடுவாரு" அப்படிங்கிற உண்மையை எடுத்துச் சொல்லி, அவர்களுக்கு நிவாரணம் பெற்றுத் தர வேண்டியதுதான் நம்முடைய கடமையாக இருக்க வேண்டும். அதுதான் இப்போதைக்கு நாம செய்ய வேண்டிய முதல் வேலையாக இருக்கிறது.

அதுக்கப்புறம் நாம செய்ய வேண்டிய ஒரு வேலை என்ன என்றால், ஒரு டேட்டாபேஸ் (Database) கிரியேட் பண்ண வேண்டி இருக்கிறது. என்ன டேட்டாபேஸ் அப்படின்னா, இந்த சட்டமன்றத் தேர்தல் அப்பதான் நாங்க பார்த்தபோது, எந்தெந்த மாவட்டத்தில், எந்தெந்த வேட்பாளர் மேல அல்லது எந்தெந்த கட்சித் தொண்டர் மேல, மாவட்டச் செயலாளர் உட்பட அல்லது அமைச்சராக இருந்தவர்கள் உட்பட யார் யார் மேல எந்தெந்த வழக்கு இருக்குதுன்னு நம்மகிட்ட ஒரு டேட்டாபேஸே கிடையாது.

**நிலுவை வழக்குகளை தொகுத்து வழங்குக!**

அது ஆட்கள் மீது இருக்கக்கூடிய குற்ற வழக்குகள் மட்டுமல்ல, கழகத்தினுடைய சொத்துக்கள் மீது நிறைய வழக்குகள் பெண்டிங்கா இருக்கு. சொல்லப்போனா கோயம்புத்தூர்ல வந்து ஒரு வழக்கு ரொம்ப நாளா பெண்டிங்கா இருக்கு. அதற்கான டேட்டாபேஸ் வந்து ஹெட் குவார்ட்டர்ஸ்ல இல்ல. எனவே ஒரு வார காலத்துக்குள்ளார வழக்கறிஞர் அணி அமைப்பாளர்கள் உங்க மாவட்டத்தில், உங்க கழக மாவட்டத்தில் கழகத் தொண்டன் முதல் கடைசி தொண்டன் முதல் மாவட்டச் செயலாளர் வரை அவங்க மேல எத்தனை வழக்கு இருக்கு, அந்த வழக்கினுடைய நிலைமை என்ன, அது எந்த இடத்தில் நிலுவையில் இருக்கு அப்படிங்கறத தொகுத்து உடனடியாக இங்க அனுப்ப வேண்டுமென்று கேட்டுக்கிறேன்.

தலைமைக் கழகத்தில் இருக்கக்கூடிய மூன்று வழக்கறிஞர்களை இதற்காக நான் நியமித்திருக்கிறேன். அவர்கள் உங்களோடு தொடர்பு கொள்வார்கள். மாவட்டத்தில் இருக்கக்கூடிய அத்தனை வழக்குகளையும் தொகுத்து நீங்க கொடுக்கணும். அது உயர் நீதிமன்ற வழக்குகளுக்கும் பொருந்தும். இங்க எத்தனை எலக்ஷன் பெட்டிஷன் பெண்டிங்கா இருக்கு, அதுல என்ன ஸ்டேஜ், அதோட ப்ளீடிங்ஸ் என்ன... இது நமக்கு பிறகு யார் வந்தாலும் கூட, எப்ப எங்கிருந்து ஒரு வழக்கறிஞர் அணி தோழர் வந்து தலைமைக் கழகத்தில் வந்து பார்த்தாலும் கூட அந்த டேட்டாபேஸ்ல இந்தக் கேஸ் எந்த நிலைமையில் இருக்கிறது, எப்படி ஈகோர்ட்ஸ் (eCourts) செயல்படுகிறதோ அதுபோன்று வழக்கறிஞருடைய டேட்டாபேஸ்லயும் ஒரு கிளியர் டேட்டாபேஸ் நம்ம தயார் பண்ண வேண்டி இருக்கிறது. அதை நீங்கள் தொடர்ந்து செய்யணும்னு கேட்டுக்கொள்கிறேன்.

இப்ப இங்க வந்திருக்கக் கூடிய தோழர்களை நான் பார்க்கிறேன். நீங்கள் ஆளுங்கட்சியாக இருந்த போது கூட எல்லாக் கூட்டத்திலும் வந்திருக்கக் கூடியவர்கள். எதிர்க்கட்சியாக இருக்கும்போது கூட வந்திருக்கிறீர்கள். யார் யாருக்கெல்லாம் உணர்வு, கழக உணர்வு இருக்கிறதோ, இயக்கத்தின் பால் ஈடுபாடு இருக்கிறதோ நீங்க எல்லாம் தவறாமல் வந்து விடுகிறீர்கள்; உங்களுடைய கடமையைச் செய்து விடுகிறீர்கள். ஆட்சியில் இருந்தப்ப பதவி வாங்கியோர் நிறைய பேர் வரல; வரமாட்டாங்க.

எத்தனை பேர் வந்திருக்கீங்கன்னும் தெரியுது, எத்தனை பேர் வர விரும்பி வர முடியலன்னும் தெரியுது, எத்தனை பேர் வர விரும்பவில்லை என்றும் தெரிகிறது, எத்தனை பேர் அரசுப் பதவிக்கு அப்ளை பண்ணி இருக்காங்கன்ற வரைக்கும் எங்களுக்குத் தெரியுது. யார் யார் அப்ளை பண்ணி இருக்கா, ஏன் அதை ரிஜெக்ட் பண்ணாங்க, அவங்க திருப்பி இங்க வரலாமான்னு பார்க்கிறாங்க... அதற்கெல்லாம் நாம் இடம் தரப்போவதில்லை. சொல்லப்போனால்... இந்த விஷயத்துல மிகவும் கண்டிப்பாக இருக்கக்கூடியது இளைஞரணி செயலாளர் அவர்கள்தான்.

**பொறுப்புடன் நடப்போம்!**

நாம் நமக்குள்ளாக எப்படி கண்காணித்துக் கொண்டிருக்கிறோமோ, அவரும் வழக்கறிஞர் அணியை மிகச் சீரிய முறையிலே கண்காணித்துக் கொண்டிருக்கிறார். அடிக்கடி என்னைக் கூப்பிட்டு, "நீங்க இதை செய்யணும், அதை செய்யணும்"னு சொல்லிக்கிட்டே இருக்கிறார். எனவே நான் ஏற்கனவே சொன்ன மாதிரி வருங்காலங்களிலே இந்த இயக்கத்தை ஏற்று நடத்த வேண்டிய அவர், அந்தப் பொறுப்பை வழக்கறிஞர் அணியைப் பொறுத்த வரைக்கும் கூட சரியாகச் செய்கிறார். அதனால நாம மிகுந்த பொறுப்போடு நடந்து கொள்ள வேண்டும் என்பதற்காக அதைச் சொல்லியிருக்கிறேன்.

அவர் முக்கியமா என் கிட்ட சொன்ன ஒரு செய்தி, வழக்கறிஞர் அணியை மறுசீரமைப்பு செய்யுங்க. அதிலே மறுசீரமைப்பு செய்யும்போது இத்தனை துணை அமைப்பாளர்கள்தான் இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை; தேவைக்கு ஏற்றார்போல் துணை அமைப்பாளருடைய எண்ணிக்கையை அதிகம் செய்து கொள்ளுங்கள். ஆனால் அவர் எப்பவுமே சொல்லும்போது ஒரு கண்டிஷனோடுதான் சொல்லுவாரு - அப்படிப் புதிதாக நியமிக்கக் கூடியவர்களிலே இளைஞர்கள் அதிகமாக இருப்பதற்குப் பாருங்கள்.

**இளம் வழக்கறிஞர்களை அணியில் இணைப்போம்!**

இளைஞர்களையும், பெண் வழக்கறிஞர்களையும் அதிகமாக துணை அமைப்பாளர்களாக நியமிக்க வேண்டிய அவசியம் இந்தக் காலத்தில் இருக்கிறது. அதற்கு நீங்கள் ஒவ்வொரு தொகுதி வாரியாக கழகத்திலே தேர்தல் காலங்களில் மட்டுமல்ல, தேர்தல் காலங்களிலும் இப்போதும் கூட சிறப்பாக செயல்படக் கூடிய வழக்கறிஞர்களுடைய பட்டியலை எனக்குத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டாவது, நாங்களெல்லாம் என்ரோல் பண்ணப்ப, 1989-இல் நான் என்ரோல் பண்ணப்ப மாசத்துக்கு ஒரு என்ரோல்மென்ட் நடக்கும்; அதுகூட ஒரு புதன்கிழமை நடக்கும். அப்போ ஒரு 200 பேர் மேக்ஸிமம் பதிவு செய்து கொள்வார்கள். இப்ப ஹைகோர்ட்ல வந்து பார்த்தீங்கன்னா ஒவ்வொரு வாரமும் 1000 பேர், 1000 பேர் என்ரோல் பண்றாங்க. அதிகமான வழக்கறிஞர்கள் உள்ளே வருகிறார்கள். ஆனால் நாம் அவர்களைக் கழகத்தின் பால் ஈர்த்து நம்மோடு இணைத்துக் கொள்வதில் தவறு செய்கிறோம்.

இந்த கிரிராஜனைக் கேட்டீங்கன்னா உங்களுக்கு ஒரு பெரிய லிஸ்ட் கொடுப்பாரு, வாரம் வாரம் எவ்வளவு தூரம் என்ரோல்மென்ட் நடக்குதுன்ட்டு. அப்ப அந்த இளம் வழக்கறிஞர்களை, உங்க உங்க பார்ல வந்து சேரக்கூடிய இளம் வழக்கறிஞர்களை கழகத்தின் பாலே ஈர்த்து, இந்த வழக்கறிஞர் அணியிலே சேர்த்து, இந்த அணியினுடைய அமைப்பை, பலத்தை அதிகரிக்க வேண்டுமாய் நான் உங்களுக்குக் கேட்டுக் கொள்கிறேன்.

எப்படி அரசியலமைப்புச் சட்டம் சொல்கிறதோ, ஃப்ரெட்டர்னிட்டி என்பதை எப்படி வலியுறுத்துகிறதோ, கழக வழக்கறிஞர் அணியிலே ஃப்ரெட்டர்னிட்டியை அதிகமாக, குறிப்பாக நாம் எதிர்க்கட்சியாக இருக்கும்போது அந்தச் சகோதரத்துவத் தன்மையை அதிகமாக வளர்த்தெடுக்க வேண்டும் என்பதை என்னுடைய விருப்பமாகவும் வேண்டுகோளாகவும் உங்களிடம் சொல்லி, இங்கே நான் கேட்டவுடனே இந்தக் கூட்டத்திற்கு வந்து நம்மையெல்லாம் சந்தித்து உரையாற்றுவதற்கு ஒப்புக் கொண்டிருக்கக்கூடிய இளைஞரணி செயலாளருக்கும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாம் இங்கே பேசியவை இதோடு போய்விடக் கூடாது. ஒரு வார காலத்திற்குள்ளாக நான் குறிப்பிட்ட First Response Team, Quick Response Team, வழக்குகளுடைய விவரங்கள், தொகுதி வாரியாக சிறப்பாக பணியாற்றக்கூடிய வழக்கறிஞர்களுடைய பட்டியல் - அவை அனைத்தையும் தலைமைக் கழகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதுவரைக்கும், இன்றும், பின்வரும் காலங்களிலும் என்னோடு கூட இருக்கும் தோழர்களுக்கு, வழக்கறிஞர் அணி தோழர்களுக்கு என்னுடைய வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்து விடைபெறுகிறேன்.

இவ்வாறு கழக சட்டத் துறைச் செயலாளர் என். ஆர்.இளங்கோ பேசினார்.




முத்தமிழறிஞர் கலைஞரின் மனச்சாட்சியாக விளங்கிய முரசொலி மாறன் அவர்களின் 93வது பிறந்த நாளினை முன்னிட்டு திருப்பூர் கிழக்கு மாவட்டம், தாராபுரம் மேற்கு ஒன்றிய கழகத்தின் சார்பில் ஒன்றியக் கழகச் செயலாளர் எஸ்.வி.செந்தில்குமார் தலைமையில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் கே.எஸ்.தனசேகர் முன்னிலையில் அவரின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினர். இதில் ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் சன் பாலு, ஒன்றிய விவசாய அணி துணை அமைப்பாளர் கோணப்பஞ்சாலை செந்தில்குமார், ஊராட்சி ஒன்றியக் குழு முன்னாள் துணைத்தலைவர் இ.சசிகுமார், ஒன்றிய துணைச் செயலாளர் நாகராஜ், நஞ்சியம்பாளையம் கிளைக் கழகச் செயலாளர் முருகேசன், மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு துணை அமைப்பாளர் சீனிவாசன், ஒன்றிய ஆதி திராவிடர் நலக்குழு துணை அமைப்பாளர் முருகன், மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு துணை அமைப்பாளர் சேக், ஒன்றிய சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு அமைப்பாளர் இசாக், சினிய கவுண்டன்பாளையம் சின்னு உள்பட பலர் கலந்து கொண்டனர்.



80 ஆம் ஆண்டு சுதந்திர தின விழாவை முன்னிட்டு, கோவை சிங்காநல்லூர், குளத்தேரி அருகில் உள்ள நஞ்சப்பா நகர் இளைஞர் நற்பணி மன்றம், திருவள்ளுவர் படிப்பகம் சார்பில் நடைபெற்ற சுதந்திரதின விழா நிகழ்ச்சியில் 10 மற்றும் +2 தேர்வுகளில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவ, மாணவிகளுக்கு கல்வி உதவித் தொகையை கழக தீர்மானக்குழு செயலாளர் நா.கார்த்திக் வழங்கினார். இதில் திருவள்ளுவர் படிப்பகம் தலைவர் நஞ்சப்பா நகர் ராமகிருஷ்ணன், இளைஞர் நற்பணி மன்றம் தலைவர் பிரவீன்குமார், சிங்காநல்லூர் பகுதி துணைச் செயலாளர் ஆர்.திராவிடமணி, தலைமைக் கழகப் பேச்சாளர் சிங்கை சௌந்தர், 61 வது வார்டு மாமன்ற உறுப்பினர் ஆதிமகேஸ்வரி உள்பட பலர் கலந்து கொண்டனர்.